**தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம்**
**மற்றும்**
**இந்திய வானிலை மையம் இணைந்து வழங்கும் வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை**

**திருவண்ணாமலை மாவட்டம்**

(16.04.2025-20.04.2025)

**அறிக்கை**

**அறிக்கை எண்:** 030/2025 **தேதி:** 15.04.2025

**மாநிலத்தில் கடந்தவாரவானிலை:**

திருவண்ணாமலை மற்றும் அதன் சுற்றுப் புறங்களில் கடந்த ஐந்து நாட்களாக வானம் தெளிவாக காணப்பட்டது. அதிகபட்ச மற்றும் குறைந்த பட்ச வெப்ப நிலை 37.0-41.0 செல்சியஸ் மற்றும் 22.0-25.0 செல்சியஸ் என்ற அளவில் இருந்தது. காற்றின் ஈரப்பதம் 44-78 விழுக்காடு நிலவியது. காற்றின் வேகம் மணிக்கு 02-06 கிலோமீட்டர் அளவில் இருந்தது.

**திருவண்ணாமலை மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை**

| கடந்தவார வானிலை (11.04.2025 முதல் 14.04.2025) | | | | ஆய்வுக் கூறுகள் | அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 11.04.2025 | 12.04.2025 | 13.04.2025 | 14.04.2025 | தேதி | 16.04.2025 | 17.04.2025 | 18.04.2025 | 19.04.2025 | 20.04.2025 |
| 0.5 | 7.4 | 0.0 | 0.0 | மழை (மி.மீ) | 0 | 2 | 5 | 3 | 4 |
| 41 | 39 | 40 | 37 | அதிக பட்ச வெப்ப நிலை (⁰செ) | 37 | 37 | 37 | 38 | 38 |
| 22 | 25 | 22 | 24 | குறைந்த பட்ச வெப்ப நிலை (⁰செ) | 25 | 25 | 25 | 25 | 25 |
| 71 | 67 | 75 | 78 | அதிக பட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 70 | 70 | 70 | 80 | 80 |
| 54 | 44 | 47 | 46 | குறைந்த பட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 45 | 45 | 45 | 55 | 55 |
| வானம் தெளிவாக காணப்படும் | வானம் தெளிவாக காணப்படும் | வானம் தெளிவாக காணப்படும் | வானம் தெளிவாக காணப்படும் | மேக மூட்டம் (ஆக்டா) | வானம் தெளிவாக காணப்படும் | வானம் தெளிவாக காணப்படும் | வானம் தெளிவாக காணப்படும் | வானம் தெளிவாக காணப்படும் | வானம் தெளிவாக காணப்படும் |
| தெற்கு தென் கிழக்கு | தெற்கு தென் கிழக்கு | கிழக்கு தென் கிழக்கு | கிழக்கு வட கிழக்கு | காற்றின் திசை (கோணம்) | தெற்கு | மேற்கு | மேற்கு தென் மேற்கு | மேற்கு | மேற்கு தென் மேற்கு |
| 4 | 2 | 2 | 6 | காற்றின் வேகம் (கி.மீ /மணி) | 2 | 4 | 4 | 4 | 2 |

**எதிர்பார்க்கப்படும் வானிலை (16.04.2025-20.04.2025)**

திருவண்ணாமலை மற்றும் அதன் சுற்றுப்பகுதிகளில் வரும் வாரத்தில் வானம் தெளிவாக காணப்படும் காணப்படும். அதிகபட்ச வெப்பநிலை 37.0-38.0 டிகிரி செல்சியஸ் ஆகவும் குறைந்த பட்ச வெப்ப நிலை 25.0 டிகிரி செல்சியஸ் ஆகவும் காற்றின் அதிகபட்ச மற்றும் குறைந்த பட்ச ஈரப்பதம் முறையே 70-80 % மற்றும் 45-55 % ஆக பதிவாக வாய்ப்புள்ளதாக இந்திய வானிலை ஆய்வு மையம் கணித்துள்ளது. சராசரி காற்றின் வேகம் 02-04 கி.மீ ஆகவும் பெரும்பாலும் மேற்கு தென் மேற்கு திசையிலிருந்து வீசக்கூடும்

**குறுஞ்செய்தி:**

(16.04.2025-20.04.2025) ஆகிய தேதிகளில் தமிழ்நாட்டில் லேசானது முதல் மிதமான மழைக்கு வாய்ப்புள்ளதாக இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

கால்நடை ஆலோசனைகள்:

1. கால்நடைகளுக்கு உன்னி மற்றும் பேன் பிடிக்காமல் இருக்க மருந்து குளியல் கொடுக்க வேண்டும். நன்றாக காயவைத்தபின் கொட்டகையில் கட்ட வேண்டும்.
2. கால்நடைகளுக்கு தேவையான பசுந்தீவனத்தை வருகின்ற கோடைகாலத்தில் பயன்படுத்த ஊறுகாய் புல்லாக மாற்றி சேமித்து வைக்க வேண்டும்.
3. கறவை மாடுகளில் பால் உற்பத்தியைப் பெருக்க தீவனத்தில் தாது உப்புக் கலவை கலந்து கொடுக்க வேண்டும்.
4. மேய்ச்சலுக்கு விடப்படும் ஆடுகளில் தாடை வீக்கம் மற்றும் வெளிறிய கண் இருப்பின் தவறாமல் ஒட்டுண்ணியியல் மருந்து அளிக்க வேண்டும்.
5. இனப்பெருக்கத்திற்கு தயார் நிலைக்கு இருக்கும் பெட்டை ஆடுகளுக்கு தரமான குட்டிகளை ஈனும் பொருட்டு இனப்பெருக்கத்திற்கு முன் புரதச்சத்தும் மாவுச் சத்தும் தாது உப்பு மற்றும் வைட்டமின்கள் நிறைந்த கலவையை கொடுக்க வேண்டும்.
6. முயல்களில் ஏற்படும் சொறி நோயை தடுக்க பாதிப்பிற்குள்ளான முயல்களின் கூண்டுகளில் தீ உமிழ் துப்பாக்கியால் சுத்தம் செய்த பிறகு முயல்களை விட வேண்டும்.
7. பன்றி கொட்டகைகளில் மீத்தேன் மற்றும் அமோனியாவின் பெருக்கத்தை தடுக்க நல்ல காற்றோட்ட வசதி செய்து தரவேண்டும்.
8. கோழிகளுக்கு அளிக்கப்படும் நீர் சுத்தமாகவும் சுகாதாரமாகவும் இருக்க வேண்டும், மேலும் ஏதேனும் நச்சுக்கள் உள்ளதா என்பதை தரக்கட்டுப்பாடு ஆய்வுக்கு உட்படுத்திய பின் அனுமதிக்க வேண்டும்.
9. கால்நடை கொட்டகைகளை சுற்றி மரங்களை நடவேண்டும், இது வெயில் காலங்களில் வெட்ப அழற்சியை தடுப்பதோடு நல்ல காற்றோட்ட வசதியை மேம்படுத்தும்.

வேளாண் ஆலோசனைகள்:

1. இலை சுருட்டு புழுவை கட்டுப்படுத்த குளோரான்ட்ரானிலிப்ரோல் 18.5% sc @ 6 மி.லி / 10 லிட்டர் தண்ணீர் கலந்து தெளிக்கவேண்டும். நெல் வயல்களில் 1% பிபிஎப்எம் தெளிக்க வேண்டும். மேலும் நைட்ரஜனை நிலைப்படுத்துவதற்கு அசோலா இட வேண்டும்.

   தற்பொழுது நிலவிவரும் சூழ்நிலையில் நெல் நாற்றங்காலில் இலைப்பேன் தாக்கம் தென்பட்டால் தயாமீதாக்ஷம் 25% WG 100 கிராம்/எக்டர் அல்லது டைமீத்யோட் 1.5 மி.லி/லிட்டர் என்ற அளவில் தெளிக்கவும். தற்பொழுது நிலவிவரும் வானிலையின் காரணமாக நெற்பயிரில் இலைச்சுருட்டுப்புழு மற்றும் தண்டுத்துளைப்பான் தாக்கம் காணப்படுவதால் அதை கட்டுப்படுத்த கார்போசல்பான் 400 மிலி/ஏக்கர் அல்லது கார்டாப் ஹைட்ரோகுளோரைடு 600 கி/ஏக்கர் என்ற அளவில் காலை அல்லது மாலை நேரத்தில் தெளிக்கவும்.
2. நிலக்கடலையில் இலைப்புள்ளி நோய் தாக்க வாய்ப்புள்ளதால் விவசாயிகள் நோய் தாக்க அறிகுறி தென்படும்பட்சத்தில் கார்பன்டாசிம் 500 கிராம்/ஹெட்டர் என்றளவில் தெளித்து கட்டுப்படுத்தலாம்.

3. வாழையில் வாடல் நோயை கட்டுப்படுத்த பேசில்லஸ் சப்டிலிஸ் மற்றும் ட்ரைக்கோடெர்மா விரிடி 2.5 கிலோ / எக்டர் இட வேண்டும் அல்லது பேசில்லஸ் சப்டிலிஸ் 5 மி.லி /லிட்டர் ஊற்ற வேண்டும். வாழையில் நுண்ணூட்ட சத்துக்களின் குறைபாட்டை நிவர்த்தி செய்ய மற்றும் பழத்தின் தரத்தை உயர்த்த, வாழை நட்ட 3, 5 மற்றும் 7 மாதங்களில் நுண்ணூட்ட கரைசலை இலைமீது தெளிக்கவும்.

4. கோடைக்காலங்களில் 1.8 மீட்டர் ஆரம் கொண்ட வட்டப்பாத்திகளில் குவிவட்டப்பகுதி மேல் நோக்கியவாறு 100 தென்னை மட்டைகளை அல்லது 15 காய்ந்த தென்னை ஓலைகளை அல்லது 10 செ.மீ உயரத்திற்கு தென்னை நார்க்கழிவு பரப்பி மண் நீர் வளத்தைப் பாதுகாக்கலாம். தேங்காய் மட்டைகளை குழிந்த பகுதி மேல் நோக்கிய வண்ணம் வட்டப்பாத்தகளிலோ அல்லது இரு தென்னை வரிசைகளுக்கு இடைவெளிகளிலோ புதைத்து வறட்சிகளைத் தாங்க ஏற்பாடு செய்யலாம்.

பசை தடவிய மஞ்சள் நிறப்பாலித்தீன் தாள்களை மரத்தை சுற்றிகட்டி முதிர்ந்த ஈக்களை கவர்ந்து அழிக்கலாம். வெள்ளை ஈக்கள் அதிகளவு பரவும் போது என்கார்ஸியா ஒட்டுண்ணிகள், காக்ஸினெல்லிட் ஒட்டுண்ணிகள் / பொறிவண்டுகள் மற்றும் கிரைசோபெர்லா இரைவிழுங்கிகள் ஆகிய நன்மை செய்யும் பூச்சிகள் தோப்புகளில் இயற்கையாகவே உருவாக ஆரம்பிக்கும். என்கார்ஸியா ஒட்டுண்ணிகள் அதிக அளவு உருவாகி வெள்ளை ஈக்களின் சேதத்தை 40 முதல் 70% அளவுக்கு குறைக்கின்றது. அதிகபாதிப்பின் போது ஒரு லிட்டர் நீருக்கு வேப்பெண்ணெய் 20 மிலி அல்லது அசாடிராக்டின் 1.0% EC 2.0 மிலி/லிட்டர் தண்ணீரில் மருந்தை ஒரு லிட்டருக்கு 1.0 மி/லி ஒட்டும் திரவத்துடன் கலந்து தென்னை ஓலையின் அடிப்புறம் தெளிக்கவும்.

முதன்மை அலுவலர் (GKMS)
பேராசிரியர் மற்றும் தலைவர்
கால்நடை உற்பத்தி மேலாண்மை துறை
சென்னை கால்நடை மருத்துவ கல்லூரி
சென்னை–7.